# உதயதாரகை.—MORNING STAR.

*Published on the 1st and 3d Thursday of every Month at one shilling a Quarter, payable in advance.*

௨. புத்தகம், சஞ்சிகை.௬.] ௲௮௱௪௨ ௵. பங்குனி ௴ ௭, தேயதி வியாழக்கிழமை, Thursday, March 17, 1842. [Vol. II. No. 6.


## பாண்டி வள நாட்டுச் சரித்திரக் குறிப்பு.

(Historical Sketch of the Pandian Kingdom)

(Continued from page 50.)

பெரும் பான்மையான சாதனங்களிலே, ராசராசேந்திரனுடைய அரசாட்சிக்குப் பின் (சிலகாலம் அரசாண்ட இராசாக்களுடைய) பேர்கள் மாத்திரம் வரிசையாயெழுதியிருக்கின்றன. அது எல்லாச் சங்கதிகளிலேயும் சரியாயொத்திருக்கவில்லை. ஆனாலும் (௨௪, ௨௫) இராசாக்கள்மட்டுந் தொகைபிரித்திருக்கிறதாகக் காண்கின்றது. ஒவ்வொரு இராசாங்கத்துக்கு இவ்விருபது வருஷங்கள் வைத்துக்கொண்டு அந்த எண்ணிக்கையுஞ் சரியானதென்று வைத்துக்கொண்டால் இந்தவரிசையிலே வந்தராசாவைக்கிறிஸ்தாண்டினுடைய இரண்டாஞ் சதகத்திலே வைத்துக்கொள்ள வேண்டியிருக்கின்றது. மேலும் அந்தக்காலக் குறிப்பு முழுதும் போதாமையாயிருக்கிறபடியினாலே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட எந்தத் தீர்மானங்களும் வெகுகாலத்துக் கிடங்கொடுக்குதென்கிறதும் வம்சசேகரனென்றவன் துரைத்தனத்துக்கு வந்த நிசமான காலம் எவ்வளவுஞ் சரியாய்த் தீர்மானிக்கக்கூடாதென்கிறதும் தெளிவாயிருக்கின்றது. இந்தக் கணக்கிலே மாத்திரமல்ல மற்ற அநேக நியாயங்களிலேயுங் கூட, நம்முடைய ஆண்டின் பூர்வசதகங்களிலே அதை வைத்துக்கொள்ளுகிறது மிகவும் போதுமாயிருக்கின்றது. அது எந்தக் காலத்திலேயாவது வந்திருக்கட்டும், ஒரு புதுமாதிரிராசரீகம் ஏற்படுத்தினவனாக வம்சசேகரனைக்குறித்துப் பல சாதனங்களிலேயுஞ் சொல்லுகிறபடியே மதுரையில அவனுடைய அரசாட்சியானது ராசதந்திரத்திலே தாறுமாறாகவிருந்ததாகக் காண்கின்றது. இந்த உலகத்தை மூடின சலப்பிரளயத்தினின்றும், பாண்டியதேசம் வெளிகண்டபின்பு அரசுசெய்த முதலிராசாவாகவும் பாண்டியதேசத்தினெல்லைகளை மறுபடி ஒழுங்குபண்ணுகிறதற்காக மூலலிங்கத்தினிடத்திலிருந்து உபதேசம் பெற்றுக்கொண்டவனாகவும், இவனைக்குறித்து மதுரைபுராணத்திற் சொல்லியிருக்கின்றது. பின்சொல்லப்பட்ட இந்தச் சங்கதியிலே பல சாதனங்களுமொத்திருக்கின்றன. பின்னும் மதுரைக்கோட்டையும் அரண்மனையும் பல கோவில்களுஞ் சாவடி சத்திரங்கள் கட்டினவனாகவும் பூர்வ பட்டினத்தை மறுபடியும் ஸ்தாபித்துஉயர்த்தினவனாகவும், இவனைப்பற்றிச் சொல்லுகிற காரியங்களிலே அவைகளொத்திருக்கின்றன. இந்தக் கட்டிடங்களிலே இன்னமுங் காணப்படுகிற குட்டிச்சுவர்களிலேயும், இடிந்து கிடக்கிற அவைகளின் கட்டைச் சுவர்களிலேயும், வம்சசேகரனுடைய பணிவிடைகளிலே இடிந்துபோனவைகள் பாதியிருக்குமென்கிறது சரிபோலவிருக்குது. மதுரைக்கோட்டையானது சுற்றளவிலே மூன்றேமுக்கால் நாழிகையளவு இப்போ இருக்கின்றது. அரண்மனை, சொக்கநாதர் கோயில், திருமலைநாயகன் சத்திரம், இவர்களுடைய குட்டிச்சுவர்களெல்லாம் இவைகளுக்குள் அடங்கியிருக்கின்றன. திருமலைநாயகன் சத்திரமானது பிற்காலத்திலே கட்டினதாகத் தோற்றுகின்றது. அரண்மனைக்குச் சேர்க்கையான கட்டிடங்கள் அநேகங் கட்டியிருக்கின்றன. இவைகள் தானியேல் (Mr. Daniel) துரையினாலே சொல்லப்பட்டபடி இந்துக்களுடைய சிற்பசாத்திரப்படிக்கும் சராசேனிச் சிற்பசாத்திரப்படிக்கும் (Saracenic Architecture) கலந்த கட்டிடங்கள்போலிருக்கின்றன ஏனென்றால், முன்னுண்டான கட்டுவேலைகள் இந்துக்களுக்குள்ளே உரித்தானதாயோசிக்கப்படுகிற அலங்காரமான, மாதிரிகளாயிருந்தபோதைக்கும், அந்தச் சவுக்கங்கள் பேரிலேயுங் கட்டைகள்பேரிலேயும, பிற்காலத்திலுண்டான கட்டிடங்கள் பதினேந்தாஞ் சதகங்களிலேயும் பதினாறாஞ் சதகங்களிலேயும் மோகல(Mogul)தேசத்து ராசாக்களாலே பாரிஷ(Persia)தேசத்து மாதிரியைச் சேர்ந்தவைகள் போலக் காண்கின்றன. இந்த யாத்திரி சொக்கநாதர் கோயிலிலேயும், அதைச் சேர்ந்த மண்டபங்களிலேயும், திருட்டாந்தரமாயிருக்கின்றதுமல்லாமல் தாங்கள் மிகவும் பூர்வீகமானவர்களென்று இந்துக்கள் வழக்காடும் படியாயும் இடங்கொடுத்திருக்கின்றது. வம்சசேகரனானவன் விசேஷமான உச்சவங்களிற் பெரிய தேர்களைச் சிறப்பாயலங்கரித்து அதிற் சுவாமியையேற்றி மனிதர்கள் வெளியேயிழுத்துக்கொண்டு போகிற வழக்கத்தையும் மறுபடி ஸ்தாபித்தானென்று சொல்லியிருக்கின்றது.

(இன்னும்வரும்.)

---

## Life of Mohammed.—மகமதுவின் சரித்திரம்.

### ௬ம். அதிகாரம்.

(*Mohammet's Pretensions respecting the Koran—The disdainful rejection of his Message by his fellow-citizens—His consequent Denunciations against them.*

(கோறுன்புத்தகப் பிரபவிய விபரம்.)

கோறுன்புத்தகமுழுவதையுஞ் சனங்களுக்குக் கொடுத்தால் அவர்களெல்லாரும் ஒரு பகுதியோடே மற்றொரு பகுதியை ஒத்துப்பார்த்து ஒன்றுக்கொன்று சமரசப்படாமற் காரியத்திலும் பொருளிலும் வித்தியாசப்பட்டதுண்டானால், என்னால்மறுமொழி சொல்லக்கூடாத அநேக கேள்விகளைக்கேட்பார்கள். அப்போ நான் முட்டுப்படவேண்டுமேயென்றெண்ணி இவ்விதமாகக் "கோறுன் புத்தகத்தைக் கொஞ்சமாய்த் தனக்குக் காபிரியேல் தூதன் வெளிப்படுத்தினாரென்றும் அப்புத்தகம் வரம்பிலா ஞானத்தையுங் கடையிலா வீரியத்தையும் இலட்சணமாகப்பொருந்திய பராபரனுடைய சிங்காசனத்தண்டையில் மோட்சமண்டபத்தில் வைக்கப்பட்டிருந்ததென்றும், இன்றைக்கு நடந்த காரியம் அல்லது நிருபித்த கட்டளையானது நாளைக்கு நடக்குங் காரியத்தோடொவ்வாமலிராதென்றுஞ் சொல்லிச் சாதித்துச் சற்றென்கிலுஞ் சனங்கள்தான் பேசும் பேச்சிற்சந்தேக விபரீதங்கொள்ளாயல் தன்னை நம்பும்படிக்குப் பண்ணிக்கொண்டார்." இவ்விதமாகவே கோறுன் புத்தகமுழுவதையுஞ் சனங்களுக்கு வெளிப்படுத்திச் சொல்ல (௨௩) வருடஞ்சென்றது. அப்படியிருந்துந் தான் மாத்திரம் அப்புத்தகம் முழுவதையும் வருடத்துக்கொருமுறை கண்டாரென்றும், அது பரதீசின் பொன்னினாலும், இரத்தினத்தினாலும் அலங்கரிக்கப்பட்ட பட்டுவஸ்திரத்தினால் மூடிக் கட்டப்பட்டிருந்ததென்றும், தான் சாகிற வருடத்தில் மாத்திரம் அப்புத்தகத்தை இரண்டுமுறை கண்டாரென்றும், தன்னுடைய சீஷர்களுக்குச் சொன்னார். இந்தக் கள்ளமுந்தப்பறையுமான கோறுன்புத்தகத்திலொருபங்கு மகமது நபியினுடைய ஓட்டத்துக்குமுன்னே மக்கநகரியிலும், மிச்சப்பகுதி மெத்தினாவிலும்(Medina) பிரசித்தம்பண்ணப்பட்டது. எப்படியாகில் கோறுனிலோர் பகுதியைத் தீர்க்கதரிசியெடுத்து அத்தைத் தன்னுடைய எழுத்துக்காரியகர்த்தனிடத்தில் (வெருன்றிலெழுதும்படி கொடுத்து அது எழுதிமுடிந்த பிறகு சனங்களுக்குக் கொடுப்பார். அத்தை அவர்கள் வாசித்துக் கெட்டியாய்த் தங்கள் மனதில் அவதானப்படுத்தின பிறகு திரும்பவும் அத்தை அவர்களிடத்திலிருந்தெடுத்து "அப்போஸ்த்தல ஆழியப்பெட்டி" என்று பெயர்கொண்ட ஓர்பெட்டியிலே வைப்பார்.— (இந்தப் பெட்டி வேதத்திற் சொல்லப்பட்ட உடன்படிக்கையின் பெட்டியென்று நாம் நினைக்க இடமுண்டு.)

மகமதுநபி சாகுந் தருணத்தில் இந்தப் பெட்டியைத் தன் பெண்சாதிகளிலொருத்தி வசமொப்படைபண்ணினார். அதிலிருந்து தானே கோறுன் புத்தகத்தின் முதற்பங்கை அபூபீக்கர் என்பவர் ஒழுங்கு பண்ணிச்சேர்த்துஎழுதினார். பிறகு (Othman) ஓதுமன் என்பவர் அத்தை எடுத்துச் சுருக்கித் திருத்திப் புதிப்பித் தொழுங்குபண்ணியிருக்கறார்.

மகமதுநபி சொன்ன காரியத்தை மக்கநகரியிற் சனமோ சற்றெங்கிலுஞ் சந்தேகங்கொள்ளாமலேற்றுக்கொண்டாலும், அவருக்குக் கட்டின உறவு முறையாரோ அவரை அங்கிகரிக்கவில்லை. சிலரோ அவரை மந்திர தந்திரவாதியென்றும், ஸ்தம்பன வித்தைக்காரனென்றுஞ் சொல்லி இழிவுபண்ணினார்கள். வேறு சிலரோ இவரைப் பூருவமான கட்டுக்கதையை விற்கிற பைத்தியகாரனென்றுஞ் சொல்விப் பழித்துப் பேசினார்கள். இன்னும் மக்கநகரியார் சொன்னது "கோறுன்புத்தகம் வானத்திலிருந்து உமக்கனு

ப்பப்பட்டதென்று சொல்லுகிறீர், உண்மையாகவே, உம்மைப் பசாசு பிடித்துக்கொண்டாட்டி அலைவுபண்ணுகின்றது" என்றார்கள். கோரான் புத்தகமோ சற்றென்கிலும் நம்பிக்கை வைக்கக்கூடாத குசமசக்கான் சொப்பனங்களை அடக்கியிருக்குதேயல்லாமல் மற்றும்படியல்லவென்று சிலர் சொன்னார்கள். சிலர் அப்புத்தகத்தை மகமது நபிதானே சம்பிறுதாயமான கள்ளத்தட்டாய்ச் செய்ததென்றார்கள். இப்படியே அவருக்கு விரோதமாகப் பற்பல காரியங்களை எடுத்துச்சொன்னார்கள். ஆனாலும் மகமது நபியோ சற்றென்கிலுந் தயிரியவீனப்படாமல், கோரான்புத்தகமுண்மையென்று சொல்லாதவன் சபிக்கப்படக்கடவன். நானே அவனை அக்கினிச்சுவாலையிற் போடுவேன். அக்கினிச் சுவாலையோ ஒருவரையுந் தப்பவையாது, அது மனிதருடைய மாமிசத்தைத் தேடுகின்றது. அதற்குப் பத்தொன்பது தூதர்கள் காரியகாரர்களாயிருக்கிறார்கள். அவிசுவாசிகளுக்கோ விலங்குகளையும் கண்ட வளையங்களையும், கொழுந்துவிட்டெரிகிற அனலையும் அவர்கள் பங்காக நிசமித்தோம். இப்படிப்பட்டவர்கள் அனைவரையும் நாம் அக்கினியிலெறிவோம். அப்போ அவர்களுடைய தோல் எல்லாம் எரிந்துரிந்துபோம். பிறகு அவர்கள் படும் ஆக்கினை கொடூரமாயிருக்கும் படிக்குப் புதுத்தோலை அதற்குப் பதிலாகக் கொடுப்போம்.

---

## தேன்சமுத்திரத் தீவில் நடந்த சங்கதி.

(Missionary Enterprises in the South seas.)

(Continued from page 30.)

இதின்மேலே எங்கள் ஊருக்குப் போக நினைத்துக் கப்பலேறிப் பாய்வலித்துச் சுகமேவந்து சேர்ந்தோம். போர்வீரர் வெற்றிகண்டவிடத்திலே கொள்ளையகப்பட்டாற் சந்தோஷத்துடனே அவைகளைத் தங்களூருக்குக் கொண்டுபோவதுபோல நாங்களுஞ் சுவிசேஷ விதையினாலே வெற்றிகொண்ட (அத்துதாகியரின்) விக்கிரகங்களை எங்கள் கப்பவின் அம்மாறு பாய்மரங்களிற் கட்டித் தூக்கிக்கொண்டு சந்தோஷத்துடனே எங்களூர்க்கரையிற் சேர்ந்தோம். எங்களூரவர்கள் அக்களிப்புடனே எங்களை அழைத்துக்கொண்டுபோனார்கள்.

அடுத்த வெள்ளிக்கிழமை இராத்திரி கோவிலிலே கூட்டங்கூடிப் பாடின பின் எங்கள் பிரயாணத்திற் கண்டவைகளை விபரமாய்ச் சொல்லி நாங்கள் கொண்டுவந்த உருவங்களையுங் காண்பித்தோம். அவ்விடத்தில் (அத்துதாகியின்) பிரதானிகளும் வந்திருந்தார்கள். அந்த வேளையில அவ்வூரவர்களிலிரண்டுபெயர் மாத்திரம் எடுத்துப்பேசின காரியங்களைச் சொல்லுகிறோம். அவையாவன, "சிநேகிதரே கடலிலே உண்டாகிற நச்சுப் பதார்த்தங்களை அநேக முறை கண்டிருக்கிறீர்கள். இவ்வூரவர்களுக்கு நஞ்சாயிருப்பதோ இந்த விக்கிரகங்கள். அவை மனிதருடைய ஆற்றுமாவிலுஞ் சரீரத்திலுந் நஞ்சைக் கலக்கப்பண்ணுகின்றன. ஆகிலும் இனிமேல் அவைகளின் பலம் எங்கள் மெற் செல்லமாட்டாதபடியினாலே சந்தோஷப்படுவோமாக. விக்கிரகாராதனையை விட்டு மனந்திரும்பாதவர்களைக் குறித்து அவன் சொன்னதாவது இவைகளை நீங்கள் தேவர்களென்று அறிக்கையிடாதிருந்தும் நீங்கள் மனந்திரும்புமட்டாக அவைகளே உங்கள் தேவர்கள், ஆதலாற் கிறிஸ்துவினிடத்து மனந்திரும்புங்கள்; அவரோடெதிர்த்து நில்லாதையுங்கள்; மரத்தினாற் செய்யப்பட்ட தேவர்களை அக்கினி பட்சித்துப் போடுகிறதே! ஆனாலுஞ் சொரூபமற்ற கடவுளுடனே ஆர்தானெதிர்த்து நிற்பான்? அவருங்களுக்குத் தென்படுகிறவரல்லவே, நீங்கள் அவருடைய அடிமுடியின்னதென்றறிகிறதற்கு உங்களுக்கு வல்லமையில்லையே, இத்தேவதைகள் வெற்றிகொள்ளப்பட்டன, ஆனாலும் காணப்படாதவரான பராபரன் மாறுபடாதவராய் என்றென்றைக்குமிருப்பார். துஷ்டகுணமுள்ளவர்களாயிருந்த இவர்கள் இப்பொழுது கிறிஸ்துவுக்குச் சகோதரராயிருக்கிறார்கள்."

மற்றவன் சொன்னது, "கிறிஸ்து இரட்சகருடைய இராச்சியம் பரம்புவதற்காக நாம் அவரை வேண்டிவருகிறோம், கடவுளும் எங்கள் வேண்டுதலைக் கெட்கிறாரென்பது நமக்குத் தெளிவாய்த் தெரிகிறது, ஏனெனில் முன்னே நாங்கள் இந்த விக்கிரகங்களில் ஒன்றையெடுத்துக்கொள்ள ஈட்டி முதலிய ஆயுதங்களினாலே ஒருவரோடொருவர் சண்டைபண்ணினாலும் எங்கள் கைகளாலெடுத்துக்கொள்வது அரிதாயிருந்தது; இப்பொழுது கத்தராகிய கிறிஸ்துவினுடைய சுவிசேஷமென்னும் படைக்கலத்தினாலே அவ்விக்கிரகங்களெல்லாமிங்கே கொண்டுவரப்பட்டிருக்கின்றனவே; ஆதலால் இவைகளைக் கொண்டுவந்த கப்பலைப் பராபரனுடைய கப்பலென்று பெயரிடுவோமாக; இதினால் யாவருஞ் சந்தோஷப்படுங்கள், ஆகிலும் பசாசுகளாகிய இவ்விக்கிரகங்கள் மேற்கொள்ளப்பட்டதென்பதற்காக அதிகஞ் சந்தோஷப்படாமல் எங்கள் நாமங்கள் பரமண்டலத்திலே சீவபுத்தகத்திலெழுதப்பட்டிருக்கிறதென்பதற்காகச் சந்தோஷப்படுங்களென்று முடித்தான்."

மறுபடி இந்த விக்கிரகங்களிற் சிலதை (இங்கிலாந்திற்) சனங்கள் காணும்படி அனுப்பவெண்ணினோம், அப்பொழுது தீவாரிலொருவன் அவர்கள் எங்கள் மதியீனத்தைக் கண்டு சிரியாதபடி அவைகளை அனுப்பாமல் எரித்துப்போடுவது நல்லதென்று கேட்டுக்கொண்டான். (போமாரி) இராயனோ தன் சனங்கள் எப்படிப்பட்ட வீண் தேவதையை வணங்கிவந்தார்களென்பதை (இங்கிலாந்து) தேசத்தார் காணத்தான்வேண்டுமென்று தன் விக்கிரகங்களை அவர்களுக்கனுப்பச்சொல்லிக் கேட்டுங்கொண்டான்.

என் கூட்டாளியாகிய (வோன்) குருவென்பவர் (ஏழ்வி) தீவென்று சொல்லப்பட்ட அக்கூட்டமான சிறுத்தீவுகளில் எவ்விதமாறுதலுந் தேறுதலுமுண்டாயிருக்கிறதென்பதை அறியும்படி அவ்விடத்துக்குப் பிரயாணமாய்ப்போனவிடத்தில் அவர் கண்டகாரியங்களிற் சில பின்னாலெழுதிக் காட்டுகிறார். மேலும் அங்கே அவர் போனதினாலே தேவாராதனைக்கிணக்கமான சில புது வீடுகள் கட்டப்பட்டு அவ்விடத்திலே அநேகர் அவராலே ஞானஸ்நானமும் பெற்றார்கள்.

(அதியு) தீவின் பிரதானி முன் எங்களுக்குச் சொல்லியிருந்தபடி இந்த (வோன்) குருவென்பவர் அவ்விடத்திற் போகமுன்னே தேவாராதனைக்கான ஒரு கோவிலைக் கட்டி முடித்திருந்தான்.

(ஏழ்வி) தீவுக்குச் சேர்ந்த (அத்துதாகி) தீவைக்குறித்து (வோன்) குரு தமது காகிதத்திற் சொல்லும் விதமெப்படியென்னில், "நான் முன் இவ்விடத்தில் வந்தபொழுது கண்டிருந்த காட்சிக்கு இப்பொழுது பெரிய மாறுதலைக் காண்கிறேன்; பெண்பிள்ளைகள் அதிகமாய்ப் படித்துவருகிறதல்லாமல் தொப்பி, மேசு முதலிய உடுப்புகளையுண்டுபண்ணப் படித்துக்கொண்டார்கள். சமுசாரச் செபம் எங்குந் நடந்து வருகிறது. யுத்தத்துக்கடுத்த முயற்சி இவர்களுக்குள்ளே இப்பொழுதில்லை. வீடுகள் இப்போ சுண்ணும்பினாலே சிறப்பாகக் கட்டப்பட்டிருக்கின்றது. அவைகளிற் கட்டில், கவுச்சி முதலிய தளபாடங்களுஞ் சேகரித்து வைத்திருக்கிறார்கள்." (மெஸதர் வோன்) என்பவர் (இராயதோங்குவில்) தாம் போதகம்பண்ணி ஞானஸ்நானம்பண்ணின சங்கதிகளைக் குறித்து எழுதின பிறகு, விசேஷித்த காரியங்களை எழுதுகிறார். அவையென்னவெனில், "இங்கிலாந்தார் (தகத்தியன்) தீவு (சேசாயுத்தி) முதலிய தீவாருக்குள்ளே சுவிசேஷம் பரம்பினதைக் குறித்து அதிகமாய்ப் பேசிக்கொள்ளுகிறார்கள். ஆனாலும் (இராயதோங்கு) தீவில் நடந்திருக்கிற காரியங்களைக் குறித்து அவர்கள் கேள்விப்படச் சம்பவித்தால் முன் சொன்ன தீவுகளைக் குறித்து அதிகம் வியப்பாய்ப் பேசார்களென்று நினைக்கிறேன்." (தகத்தியன்) தீவிலே குருமார் பதினைந்து வருடமாகப் பிரயாசப்பட்டதின்மேல் அதின்மேற் பலனைக் கண்டார்கள். (இராயதோங்கு) தீவு இற்றைக்கு இரண்டு வருஷத்துக்கு முன்னே இச் சமுத்திரத்திலே இருந்ததென்பதை அறிந்தவர்களில்லையே, அல்லவென்று இவர்களிப்படிப்பட்ட நற்செய்தி உலகத்திலெவ்விடத்திலாகுதல் அறிவிக்கப்பட்டுவருகிறதென்பதைக் கேள்விப்பட்டிருக்கவுமில்லையே. அல்லாமலுமிப்பொழுது இவர்களுக்குள்ளே இருக்கிற மாறுதலுந் தேவபத்தியுஞ் சமுசாரச் செபங்களுந் (தகத்தியன்) தீவு முதலான மற்றுந் தீவாருக்குட் காணப்படமாட்டாதென்று நினைக்கிறேன். மேலும் இவர்கள் சுய சாதியாரான இரண்டு போதகர்களாலே இந்த மாறுதலித்தீவாருக்குள்ளேயுண்டாயிற்று, இவர்கள் இங்கே வரமுன்னே எரோப்பைக் குருமாரிலொருவருமிங்கே வரத் துணியவில்லை.

நானும், என் மனைவியும், (பிற்றுமனும்) அவர் பெண்சாதியும் ஒருவருஷக்காலமாக (இராயதோங்கு) தீவிலேயிருந்தோம், நாங்கள் இங்கேயிருக்கையில் இதற்கு முந்தின வருஷங்களிலே அவ்விடங்களில் நடந்த மாறுதல்களைப் பார்க்க இந்த வருஷத்திலே அநேகந் தேறுதல்கள் காணப்படத்தக்கதாகக் கத்தர் அவ்விடத்திலே சுவிசேஷ விரையைப் பரம்பப்பண்ணினார். இவ்விடத்திலிருந்த போதகர் புது வீடு கட்டி அதற்குப் போகப் புறப்பட்ட நாளிலே சனங்களெல்லாருங்கூடி ஒரு கூட்டம் வைத்தார்கள். அந்தவிடத்திலே நாங்களும் போனோம். அத்தருணத்திலே கூடியிருந்

தவர்களுக்கு அவ்விடத்திவிருந்த போதகர்களில் ஒருவர் போதகம்பண்ணிமுடித்த பிறகு எங்களுடனே கைகுலுக்கி ஆசாரஞ் செய்யும்படி சனங்கள் ஒருவர் ஒருவராய் வந்து எங்கள் கைகள் உளைவுகொள்ளத்தக்கதாக அங்கே நின்ற மூவாயிரஞ் சனங்களுங் கைகுலுக்கினார்கள். இப்போதகர் கட்டின புதுவீடு அத் தீவுக்குக்கிழக்குப்பக்கமாயுந் தூரமாயுமிருந்ததினாலே இவர்கள் சாமான்களைக் கொண்டுபோவதற்குத் தீவாரிற் பிரதானிகள் தலைமைக்காரர்முதலாக யாவரும் வந்து சேர்ந்து சிலர் இவர்களுடைய தீன்பண்டமூட்டைகளையுஞ் சிலர் கட்டில் கவுச்சிகளையுஞ், சிலர் உடுப்புப் பெட்டிகளையும் எடுத்துக்கொண்டு போனார்கள். போகையில் மழையுரத்துப் பெய்ததினாலே தெருக்களிற் குழந்தை குட்டிகள் நடக்க வசதியாயிராதே்தப்பொனாலுந் தீவார் நல்ல தோள் வலிமையையுடையவர்களானபடியால் நடக்கமாட்டாத குழந்தைகளைத் தங்கள் தோள்களின்மேலே தூக்கிவைத்துக்கொண்டு இவ்வித தயவுகளை எல்லாம் இவர்களுக்குக் காண்பித்துக் கூட்டிக்கொண்டுபோனார்கள். இவர்களுடனே நாங்களுங் கூடிக்கொண்டுபோனோம். வீடுகள் நல்லாய்க் கட்டப்பட்டிருந்தது. அதிலே திறமான ஒரு வீட்டிலே நாங்கள் இருக்கும்படிக்கு அதை எங்களுக்குக் கொடுத்தார்கள். இரண்டொரு நாளைக்குப் பிறகு போதகர்கள் எங்களிடத்துக்கு வந்து நாங்கள் வீட்டுக்குள்ளிராமல் வாசலில் வந்திருக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். அப்படியே நாங்கள் வந்திருக்கையில் தீவாரில் வெகு சனங்கள் கூட்டங்கூட்டமாகத் தலைச்சுமைகளுடனே வந்து எங்களுக்கு முன்பாக அந்தச் சுமைகளை இறக்கினார்கள். அதென்னவென்று நாங்கள் கவனமாய்ப் பார்த்தவிடத்தில் சில இரும்பினாலுஞ் சில மரத்தினாலுஞ் செய்யப்பட்ட விக்கிரகச் சுரூபங்களென்று கண்டோம். அந்த விக்கிரகங்களெல்லாம் இறகுகளினாலுஞ் சீலைத்துணிகளினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பதினாலு சுரூபங்கள் அங்கேயிருந்தன. இவைகளிற் சிலதை எங்கள் சமுகத்திற் கிழித்து உடைத்தெறிந்தார்கள். சிலதை இங்கிலாந்துக்கு அனுப்பக் கேட்டுக்கொண்டார்கள்.

(இன்னும் வரும்.)

---

## The History of Christianity in Ceylon.

(Translated from the "Friend.")

[Continued from page 55.]

### இலங்கைத்தீபக கிறிஸதுசமயோற்பவ விருத்தாந்தம்.

ஆறும் சதகத்தில் இலங்கைத்தீவிலே அதிகம் யாபாரத்தொழில் நடந்தது. இந்தியரோ இவ்விடத்திவிருந்து பட்டுவத்திரம், கந்தவருக்கங்கள், இரத்தினக்கற்கள் முதலான நகைகளையுந் தங்கள் தங்கள் சொய ஊருக்கேற்றிக் கொண்டுபோய் விற்க, உரோமர் (Romans) பார்சியர் (Persians) முதலான சாதியாரோ மறு மறு தேசங்களுக்கேற்றிக்கொண்டு போய் யாபாரம்பண்ணிவந்தார்கள். இவ்வாண்டின் துவக்கத்தில், கொஸ்மஸ் (Cosmos Indopleustes) என்னும் அலக்கு சந்தரிய வருத்தகன் இந்துதேசத்துக்கு வந்து போனான். "இந்து தேசத்துக்கப்பால் இந்து சமுத்திரத்தில் தீவு இராவணம் என்னுந் தீவில் ஒரு கிறிஸ்துசபையுண்டு. அதிற் போதகருஞ் சபையாருந் தேவாராதனை பண்ணி வருகிறார்கள். இத்தீவுக்கப்பாற் கிறிஸ்த்தவர்களிருக்கிறார்களோ என்னவோ தெரியாது" எனக்கொஸ்மஸ் என்பவனெழுதியிருக்கிறான். இந்தக் காலந்தொடங்கி மகமது மதத்தை அநுசரிக்குந் துருக்கர் (Turks) இந்து தேசத்துக்கு வந்த காலம் வரைக்கும் இலங்கைத் தீவிற் கிறிஸ்துமார்க்கப் பிரபலியத்தைப் பற்றி யாதொன்றுமறியோம். முற்காலத்திற் பார்சியர் முதலிய அந்நிய வருத்தகர்கள் இலங்கைத்தீவுக்கு வந்து சபையை நாட்டித் தேவாராதனை பண்ணி வந்தார்களென்பதற்குச் சந்தேகமில்லை. காலத்துக்குக் காலம் யுத்தங்களும் கலகங்களும் நடந்தபடியால் வாணிகம் நடந்தேறாமற் சபை யற்றுப் போயிற்று.

௲௫௱௫ ஆண்டு லோறன்கோ அல்மிடர் (D. Lorence d' Almida) என்ற ஒரு பறங்கிக்காரன் (Galle) காலியில் வந்திறங்கினபொழுது அவ்விடத்திவிருந்து ஊர்ப்பிறந்த இராசாக்கள் அனைவரும் யுத்த முயற்சியிலேற்பட்டிருந்தபடியாற் கிறிஸ்துமார்க்கமிவ்விடத்திலே சுறுக்காகப் பரம்புகிறதற்கு வழியாகுமென்று கண்டான். அப்போ கொற்றாவிவிருந்த (Cotta) முதற் சக்கிரவத்தி காரியம் மோசம் போகுதென்று கண்டு தன் பட்டத்துக்கு வாவிருக்கிற இராசாவின் படமும், பொற்கிரீடமுமொன்று கொடுத்து லிஸ்பன் (Lisbon) என்ற தேசத்துக்குத் தானுபத்தியமனுப்பினான். போன தானுபத்தியத்தை, ௩ம்.யோவான் (Don John III.) அதிக உபசாரணையோடேற்றுக்கொண்டு அவர்களுக்கு வந்தனமுஞ் செய்து தன்னரண்மனையிலே தானே சொல்லப்பட்ட பொற்கிரீடத்தை உருவத்தின்மேல் வைத்துப் பிறகு இராசாவும் ஞானஸ்நானம்பெற்றார். அந்த வேளையிலே கண்டியிராசாவும் மன்னாருக்கோட (Manaar) எதுவாயிருந்தபடியால் ஒரே நாளிலே தானுந் தன் மனைவியுங் கத்திரினா என்ற (Catharine) மகளொருத்தியுங் கிறிஸ்துசபையிற் சேர்ந்தார்கள். இவர்கள் மன்னாருக்குப் போய்க் கொஞ்சக்காலஞ் சென்றபிறகு பிதாக் காலஞ் சென்றுபோகக் கத்திரினா என்றவளைப் பறங்கிக்காரர் ஆதரித்துத் தாபரித்துவந்தார்கள்.

[இன்னும் வரும்.]

---

### இலக்கணக்களஞ்சியம்.

(On Tamil Grammar.)

மகாகனம்பொருந்திய முகாமைக்காரருக்கு வந்தனம்.

(இலக்கணக்கோத்தொழிபியல்.)

முப்பதெழுத்து முறையேயொற்றுமை, யன்றியுங் கசவுஞ் சயவும் வயவும், மனவும் லளவும் வலவுமன்றியு, மின்னும்பலவா மொற்றுமையென்ப. உம். அறுமுகம்-ஆறுமுகம்-பிக்கை- பிச்சை-பங்கசம்-பங்கயம்-கோவில்-கோயில்-கலம்-கலன்-அலமருகுயிலினம்-அளமருகுயிலினம்-வில்வம்-வில்லம் எனவரும். இன்னும் பலவென்றதனாற் பகுதிமுதலேந்தும் பெயர்முதனான்கு நிலைமொழியும் வருமொழியுங் கொள்க. உம். இயம்பினார் விளம்பினார் எம். உண்டனன்-உண்டான் எம். உண்ணாநின்றான்-உண்கின்றான் எம். ஒன்றனை-ஒன்றினை எம். முட்டீது-முஃடீது எம். கற்றீது-கஃறீது எம். பொற்பணி-ஆடகப்பணி எம். தொட்டான் தீண்டினான் எம். அதுவோ-அதுகொல் எம். கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப்பொருள்-சிவனஞ்சுதின்றான்-அரன்விடமுண்டான் என முறையே காண்க[முப்பதெழுத்து மென்றது முறையே யொற்றுமையென்ற தகரமுதனகவீறுவரைக்கு மொவ்வொன்றுக் கொவ்வொன் றினமென்றது தோன்ற வற்புறுத்திக் கூறியதென்க. அன்றியென வீரிடத்திற் கூறியது முன்புள்ளது-இன்றுள்ளது-சொல்லொற்றுமையென்னு மூவிதியும் பகுத்தறிதற்கென்க ] (மன)

(போலியெழுத்தைப்போற்றுதல்கடனே.)

ஏது. தன்னல் ஐயெனெடுஞ்சினை மெய்பெறத்தோற்றும் ஐயந்திரப்பொருளை யுணர்த்தலு மெய்நடுநிலையு மிகுதிலறகோற்சே கை

யினாற்சொல்லக் கண்ணினாற்கேட்டிடு மொய்கொள் சிந்தையின்மூ
லையுமாயினம் கையறுநெஞ்சங் கடியல்வேண்டும் பொய்தீர்கா
ட்சிப் புரையோய்போற்றி ஔவியநெஞ்சத்தானுக்கமுஞ் செவ்வி
யான்கேடுநினைக்கப்படும். இவைபோலவருஞ் செய்யுளெல்லாமோ
னைத்தொடையொடு மெதுகைத்தொடையொடு மாறுபட்டிலக்க
ண வழுவாதல்காண்க. வடநூலாரிவ்விலக்கணத்தைத் தள்ளாதுச
மனுக்கரமென்று பெயரிட்டு ஓவ்விரண்டினையுந் தழுவினாரது பற்
றித்தமிழ்நூலாரினையெழுத்தென்றுமொழிபெயர்க்க மறந்துபோ
லியெழுத்தென்று மொழிபெயர்த்ததனாற் போலிச்சாக்கும் போலி
யிலக்கணம் போலியுரையென்னுஞ் சொற்களைப்போலே யிதனை
யுங் கருதி முன்னும் பின்னும்பாராது தள்ளினாரதுபற்றியே யிச்
சூத்திரஞ்செய்தனமென்க. (ரு)

சிலபெயரெச்சமுஞ் சிலவினைத்தொகையு மிருவகையுவமையும்
வண்ணச்சினைச்சொலும் பண்புத்தொகையென்ப கரும்வடநூலே.

உம். எண்ணும்பொருள்—எது, எண்ணப்படுவதாகிய பொருள்—
எம். துணியும்பொருள்—எது, துணியப்படுவதாகியபொருள் எம். வ
ரும் இவ்விரண்டனையும் வேறிலக்கணமென்பர். உரைகல்—எது, உ
ரைக்கப்படுவதாகியகல் எம். செய்குன்று—எது, செய்யப்படுவதாகி
யகுன்று எம். வரும்—மதிமுகம்—முகமதி—என்புழி—உருபிடையினுமீ
ற்றினுந்தொக்கதென்பர்—செங்காருரை—வெண்பூத்தாமரை—முறை
யேகாண்க. பகரும்வடநூலென்வேதமிழ்க்கடாதென்க, ஆயினீரி
லக்கணமும்பாயிரத்துட்கூறியதென்னையெனின் பெரும்பான்மை
நோக்கினனென்க. (யரு)

காரணமதனையேயிடுகுறியாகவும், மிடுகுறியதனையே காரணமா
கவும் பலசொல்லினையே யொருசொலலாகவு மொருசொல்லினை
யே பலசொல்லாகவுங் கருதுவரொரோவழிக்கற்றறிந்தோரே.

உம். கரி—கரம்—பணி—பணம்—வேல்—வேலன் இவற்றுள் யானை—பா
ம்பு—முருகன் எனவிடுகுறியாகவே பொருள்கொள்வர். பிறைசூடி—
சக்கரபாணி—கணபதி—காங்கேயனூர்—கனகசபையார்—சிதம்பரதில்
லைநாதர்—சந்திரசேகரர்—வயிரமுத்தர்—கந்தசுவாமியார்—சிவகாமி—
தெய்வயானை— இக்காரணப்பெயர்களை ஓர்மகனுக்கும், ஓர்மக
ளுக்கும் பொருத்தியிடுகுறிபெயரென்றே கொள்வர். மொழிப்பொ
ருட்காரணமென்னுஞ் சூத்திரத்திவிடுகுறிகளையெல்லாங் காரண
மாகக்கொண்டதுகாண்க. வாள்போலும்வேற்கண்—கோடாதசெ
ங்கோல்—வெருவந்தசெய்தொழுகும்வெங்கோலன்—அடியளந்தான்
ருயதெல்லாம். இவற்றுள், கண்—செங்கோல்—கொடுங்கோல்— அரி
எனவொருசொல்லாகவே கொள்வர். அன்றியும் கும்பகாரன்— இ
சைகாரன்—அலங்காரன்—இவற்றையுமொருசொல்லாகவே கொள்
வர். பொருப்பன்—இதனுள்பொருப்பென்னுமுரிமைப்பொருளினை
யுடையான் முருகன்—எனவும்—பொருப்பிற்கிறைவனாகிய குறிஞ்சி
மன்—என்றும—பலசொல்லாகவேகொள்வர். இந்நான்கிற்குஞ்சொ
ற்கிடந்தபடியே பொருள்கூறிவிலக்கணவழுவாதனோக்கி யிங்ஙன
மாறுபடச் சூத்திரஞ்செய்தனமென்க. இவக்கணவழுவாதலைவிரிக்
கிற் பெருகும. (உகூ)

வேற்றுமைவழியோடல்வழியன்றியு, மவ்விருவழியுமடங்குமபொ
துவழி, யம்மூன்றுள்ளே யடங்காவழியுமெனநான்கெல்லையியம்பு
வர்சந்தி.

இ—ள் பொதுவழிகொண்டதென்னெனின் பொதுத்திணை—பொ
துப்பால்—பொதுப்பெயர்—பொதுவினை— பொதுக்காலம்— பொது
வெச்சம்—பொதுமுற்று பொதுவிடமுதலியவற்றைத்தேர்ந்துகொ
ள்க. அடங்காவழிகொண்டதென்னெனின் அவி—பேடு—தெய்வம்—உ
லகமுதலியவற்றிற்குச் சொற்பொருடீணபான்முதலிய தொடுக்
கிற் சிறப்புமன்று பொதுவுமன்றென்றினுமடங்கா வழிபோலவெ
ன்க. வேற்றுமையல்வழிக்குதாரணம் வெளிப்படையேனை அவற்றி
ற்குதாரணம்வருமாறு. அஞ்செவி— அங்கை—கருப்புவேலி—உரைநூ
ல்—நூலுரை—மதிமுகம்—முகமதி—புலிகொன்றது—நாய்கடித்தது— இ
வைபோல்வன பொதுவழிச்சந்தி. பொருபடை—கருங்குதிரை— ப
டைபடை—பஃதுபத்து—வயிறுமோடு—மூன்றில—சாத்தன்சோற்றை
ப்பகற்கண்பசித்து விருந்தோடுண்டான். இவைபோல்வனவடங்
காவழிச்சந்திபொதுத்திணைமுதலைந்தும்வெளிப்படை—ஏனைமூன்றும்
வருமாறு ஓடியசாத்தன்—ஓடியவந்தான்—எது, முற்றுவினை. இவன்
சொன்னசொல். எது. முன்னிலைக்குமபொதுவிடம,தன்னொடுடுக்
குந் தன்மைப்பன்மையு முன்னிலைகூடிய படர்க்கையுமுன்னிலையும்
பொதுவிடமென்றலுமொன்று. அடங்காச்சந்தியை விரிக்கிற் பெ
ருகுமென்க. (ருக)

உயர்திணையியற்பெயரஃறிணையியற்பெய, ருயர்திணைப்பொரு
ளிற்சாதியொருமை,யஃறிணைப்பொருளிற் சாதியொருமை,யுயர்தி
ணைப்பொருளிற் சாதிப்பன்மை யஃறிணைப்பொருளிற் சாதிப்பன்
மை, யொருசொனின்றே தனித்தனியுதவுதலெனப்பிரிவேழென்றி
யம்புவர்புலவர். உம். இறை என்னு முயர்திணையியற்பெயரொரு
மைக்கும் பன்மைக்கும்பொதுவாய்நின்று வருமொழிவந்தபின்பு
இறைவன்வந்தான்—இறைவர்வந்தார் எனநிற்கும் கோ—வேந்து—அ
ரசு—அமைச்சு—கவி—பெண்டு—வேசை— உமை—தையல்— பேதை—பெ
தும்பை—முதலாயினவுமது. இவை—கோன்—கோக்கள்—வேந்தர்—வே
ந்தர்கள்—அரசர்—அரசர்கள்—அமைச்சர்— அமைச்சர்கள்— கவிகள்—
பெண்டுகள்—வேசையாள்—வேசையார்—உமையாள்—உமையார்—தை
யலாள்—தையலார்—பேதையாள்—பேதையார்—பெதும்பையாள்—பெ
தும்பையார் எனவரும். அஃறிணையியற்பெயர்வெளிப்படை— சிவி
கைபொறுத்தான்—வறியவனிரந்தான்—தானுமதனைவழங்கான் பய
ன்றுவ்வான்—இவைவருமொழிநோக்காமலே தனக்குரிய வொருமை
ப்பாலைவிட்டுப் பன்மைப்பாலையே விளக்குதலானுயர் திணைச்சாதி
யொருமையாயிற்று. இவ்விதியைமறந்து சிவிகைபொறுத்தாரெ
னக் குறளைத் திருத்தினாருமுளர். இல்வாழ்வானென்பான்— ஔவித்
தழுக்காறுடையானை—உடையானரசருளேறு— செல்லாமையுண்டே
லெனக்குரைமற்றுநின் வலவரவுவாழ்வார்க்குரை என முப்பாலினு
ம் பரந்துபெரும்பான்மை வருதலை நோக்கிலார்போலும் இவற்
றைத் திருத்த மறந்தனர்பொலுமென்க. நூலெனப்படுவது நுவ
லுங்காலை அஞ்சுவதஞ்சாமைபேதமையஞ்சுவதஞ்சலறிவார்தொ
ழில் உலகத்தாருண்டென்பதில்லென்பான் நேர்வதுநாடு—வினைவ
துநாடு—இவை வருமொழிநோக்காமலே தனக்குரிய ஒருமைப்பாலை
விட்டுப் பன்மைப்பாலையே விளக்குதலாலஃறிணைச்சாதி யொரு
மையாயிற்று "எண்ணென்பவேனையெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழுமுயிர்க்கு" இதனுளுயர்திணைச்சாதிப்பன்மை
யு மஃறிணைச்சாதிப்பன்மையுங்காண்க. கடுமொழியுங் கையிகந்
த தண்டமும் வேந்தனடுமுரண்டேய்க்குமரம்—பொருள்கருவி கால
மவினையிடனொடைந்துமிருடீரவெண்ணிச்செயல் இவற்றுள் அரம்
என்றதும், ஒடு—என்றதும், ஒருசொல்லாகநின்றே தனித்தனி உ
தவுதல்காண்க. முதனிலைத்தீபகம் இடைநிலைத்தீபகம் கடைநிலை
த்தீபகம் முதலாயினவுமது. இவ்வேழு நின்றநிலைதப்பிப்பிரிந்தது
காண்க. இவற்றுளுயர்திணையியற்பெயரில்லையென்பாரும் அஃறி
ணையியற்பெருஞ்சாதி யொருமையுமோரிலக்கணமென்பாரும் உ
யர்திணைச்சாதியொருமையும் அஃறிணைச்சாதியொருமையு மோரி
லக்கணமென்பாரும் சாதிப்பன்மையில்லையென்பாரும் ஒருசொ
ன்னின்று தனித்தனியுதவுதலைப்பெயர்ப்பொருள்கொளினும் பிரி
ப்பெச்சத்தினுமடக்குவாருமுளர். அவரிலக்கணநுட்பங் கூர்ந்தில
ர்போலும் அவர்களை மறுக்கிற் பெருகுமென்க. இப்பிரிவேழுமொ
ன்பது பொருள்கோளினு மடங்காவாம். (சங)

அஅந்நநிகுவிவருமொழிப்பொருளை, யின்மைபிறிது மறையினு
ளொன்றுக்கும். உம். அரூபம்—அநங்கம்— நிமலன்—குதர்க்கம்— விகு
ணம் பிறவுமவ்வாறுவருதல்காண்க. (யச)

இப்படிக்கு
தமிழ்ப்புலவர் வேதகிரிமுதலியார்.

---

## நியாயமற்ற சமாதான நிராகரித்தலினெதிர்மொழிக்குச் சார்புரை.

(On Tamil Grammar.)

முகாமைக்காரரே,

சோடசாவதானப் புலவர் முதலிய பற்பல விற்பனர்கள் மகா
கனம்பொருந்திய தீ. தீ. மனப்புலிமுதலியார் சரவணமுத்தென்
பவர் இடையினத்திற்கினமில்லையென்றது நியாயமற்றதென்று மு
யற்குக் கொம்புண்டென்பவர்கள் போல இடையினத்துக்கு இன
முண்டென்றுகூறி, வேயல்வேரல் என வருதலால் யகரத்திற்கு ரக
ரமினமென்றும், கல்வலிது எனவருதலால் லகரத்திற்கு வகரமின
மென்றும் காழகவுடையான் காளகவுடையான் என வருதலால் ழ
கரத்திற்கு ளகரமினமென்றும் உரைத்தார்களே, அவ்வாறு கூற
லே நியாயமற்றதாயிருக்கின்றதே. ஏனெனில் நன்னூல் பிறப்பதி
காரத்தினுள் ககரத்தோடே அதற்கினமாகிய ஙகரத்திற்கும் சக
ரத்தோடே அதற்கினமாகிய ஞகரத்திற்கும் டகரத்தோடே அத
ற்கினமாகிய ணகரத்திற்கும் தகரத்தோடே அதற்கினமாகிய நக
ரத்திற்கும் பகரத்தோடே அதற்கினமாகிய மகரத்திற்கும் றகர
த்தோடே அதற்கினமாகிய னகரத்திற்கும் தனித்தனி முயற்சிவ
கையாற் பிறப்புணர்த்தல் போல யகரத்தோடே ரகரத்திற்குமல

கரத்தோடே வகரத்திற்கும் ழகரத்தோடே ளகரத்திற்கும் தனி
த்தனி முயற்சிவகையாற் பிறப்புணர்த்தல்வேண்டும். அவ்வாறி
ன்மையானும், பாதிச் சுரைக்காய் கறிக்குப் பாதிச் சுரைக்காய்
விரைக்கென்றதுபோல வேயல் வேரல் என யகரநின்ற சிலேக்கள
த்து ரகரநிற்பினும் வேற்றுமையின்றி யொரே பொருளை உணர்த்
தலாவினமென்ற விதிகாழகவுடையான் காளகவுடையான் என
வரும். ழகரளகரங்கட்குப் பொருந்துதல்போலக் கல்வவிது என
வரும். லகரவகரங்கட்குப் பொருந்தாமையானும், அவர்கள்கா
ட்டியதன்றிக் கல்யாது எனவருதலால் லகரத்திற்கு வகரமன்றி
யகரமுமினமாமெனக் கூறல்வேண்டும். அவ்வாறு விற்பத்திமான்
கள் கூறுமையானும், 'சுவைப்புளிமுன்னின்மென்மையுந் தோ
ன்றும" எனவும் "ணனமுன்னினங்கசஞபயவவ்வரும்" எனவும் வ
ல்வினத்துக்கு மெல்வினத்தை யினமாகப் பவணந்தி முனிவர் புல
ப்படக்கூறல்போல இவ்விடையின வீறுபுணரும் புணர்ப்பிலேயா
யினும் மயக்கவிதியிலேயாயினும் நூலாசிரியர் அல்லது உரையா
சிரியர் யரக்களையேயாயினும் லவக்களையேயாயினும் ழளக்களையே
யாயினும் இனமென்று கூறல்வேண்டும். அவ்வாறின்மையானும்,
இடையெழுத்துக்களிவ்விரண்டோரினமாமென்பதடாது. ஆதலா
ல அவர் அவதானமற்ற புலவரென்றும் மற்றவர்கள் விற்பத்தியற்
றவர்களென்றும் புலப்படுகின்றது. அஃதன்றி இடையினத்துக்
கினமுண்டானுற் பெயரின்னதென்றும இத்தனையெழுத்தென்றுங்
காட்டி மேற்படி தமிழ்த்தலைமைப்புலமைச் சரவணமுத்தென்ப
வராற் சொல்லப்பட்ட பவுன்களை வாங்கத் தெண்டிப்பார்களா
க. நான் சொல்லும் புத்தி இடையினத்துக்கினமுண்டானுல் இ
டையினமென்றொருக்காலும் பெயர்ப்படாதென்று இதினுலாவ
து அறிந்துகொள்வார்களாக. இப்படிக்கு.

யாழ்ப்பாணம். ௲அாசஉம். } வெங்கடாசலையர்
ஆ. பங்குனி௴. எதிகதி. } கார்த்திகேசையன்.

---

## ஸ்ரீ. ஸ்ரீ. ம. சரவணமுத்துக்கநுசாரம்.

### (On Tamil Grammar-)

முகாமைக்காரரே,

நலலூர் மனப்புலிமுதலியார் சரவணமுத்தென்பவர் இடையி
னத்துக்கினமில்லையெனச்சமாதானஞ் சொன்ன யுத்திதிட்பத்தை
யுணராமல் வித்துவான்களாயிருப்பவர்களிலக்கணச் சாட்சிகொ
ண்டு நிராகரிக்கத்தொடங்கினது துக்கமான காரியம். சரவணமு
த்தவர்கள் இடையினத்திற்கினம் இலக்கண நூற்களின்படியில்லை
யென்று சொல்லவில்லையே அப்படியேல் இலக்கணச்சாட்சிவவி
யோடேற்கும். இடையினத்துக்கினங்கொள்வதவசரமில்லையென்
றும், அஃதொழிந்த மற்றையமுதலெழுத்துகள் யாவுமிவ்விரண்
டோரினமாயினமாதலவசரமென்றுங் கருதி யிடையினத்துக்கினமி
லலையென்றூர். அது சான்றோர் வாக்கிற்கேராதென்னின் சான்றோர்
சொன்ன யாவையுஞ் சரியென்று நாம் கொள்ளக்கூடாது. அப்ப
டிக்கொள்ளில், எழுவகைமதச்சாதனைக்கிடமின்று. மேலும் அக
த்தியத்திற் சொல்லிய சிலவற்றைத் தொல்காப்பியம் மறுத்துந்
தொல்காப்பியத்திற் சொலலிய சிலவற்றை நன்னூல் மறுத்தும்,
நன்னூலிற் சொல்லிய சிலவற்றை இலக்கணவிளக்கம் மறுத்தும்
வருகிறபடியால் அவ்விலக்கணநூற்களுக்காசிரியராகிய அகத்திய
ர், தொல்காப்பியர், பவணந்தி, வைத்தியநாதபண்டாரமுதலான
வர்களைப் பிழைப்படாச்சான்றோரென்னப்போகாதே. தாமெழு
தினதற்காதரவாக எடுத்துக்காட்டிய இரண்டு புலவர்களுடைய
நூல்களில் இனங்கொளு முதலெழுத்துக்களுள் ளிடையினத்தைத்
தள்ளியிருப்பதைக் காணுதார்போலச் சரவணமுத்தென்பவர்சொ
ன்னதிற் சான்றோர் தாங்கற்படவேண்டியதென்ன? அவன்தா
னென்னுங் கடிதத்தின்படி சான்றோர் இடையினத்தைப் பற்றிக்
கேட்டிருக்குங் கேள்விப்படிசெய்து நன்கொடை வாங்கிக்கொ
ள்ளலாமே. அதைவிட்டு எதிரெழுத்திலென்ன பலன்? முன்னுள்
ள பெரியவர்கள் ஒன்றைச் சொன்னதினுல் மாத்திரம் நாம் அதை
ஏற்றுக்கொள்வது புத்திக்குறைச்சல, அப்படியிருக்கிற் கல்வி திரு
ந்தாது, முன்னுள்ளவர்களுடைய மோசத்திற் பின்னுள்ளவர்களும்
அமிழ்ந்து மாழவேண்டிவரும் ஆகையால் இடையினத்துக்கினமி
லலையென்று சரவணமுத்தவர்கள் சொன்ன சமாதானத்தினியா
யத்தையுமுண்மையையுங் கற்றோரறிந்து மடல்பெரிதுதாழையெ
ன்னும பாட்டின் கருத்தையும் முற்றுணர்ந்துகொள்வார்களாக.

இவ்விடம், இப்படிக்கு,
பங்குனி ௴. அ. திகதி. அலன்தாணுக்கநுசாரி

---

## நிகண்டு வினவுக்த விடை.

### Answer to the question on Negandu in No. I. Vol. II.

உதயதாரகையின் முகாமைத் துரைகளே,

உங்கள் உதயதாரகை, உம். புத்தகம், கஞ. சஞ்சிகையிற் கல்யா
ணசுந்தரம்பிள்ளை அவர்கள் வினவிய நிகண்டு வினமெத்த நியா
யமானது. புத்தனுக்குப் புகன்ற இரண்டு கவியிலுஞ் சாந்தன்
சாந்தன் எனக் கூறியதைக்கூறியிருத்தல் பிழையென்று என் சிற்
றறிவிற்குத் தோன்றுகிறது. ஆகையால் "புனிதன் பகவன் சைன
ன் மூர்த்தி போகிவேந்தன் சினவரன் புத்தன்" எனத்திவாகரத்திலு
ம், சதுரகராதியிற் புத்தனென்ற இயற்சொல்லுக்குக் கூறிய திரி
சொற்களிலுஞ், சைனன் என்னும் பேர் காண்கின்றமையாலும்
அப்பெயர் மண்டலபுருடனிகண்டிற் காணுமையாலும் அந்நிகண்
டிற் புத்தனுக்குச் சொல்லிய இரண்டாம் பாட்டில் நான்காம் அ
டி "புண்ணிய முதல்வன் சைனன் பூமிசைநடந்தோன் புத்தன்" எ
ன்றிருக்கலாம். இப்படிக்கு

உடுப்பிட்டி பள்ளிக்கூடம் கதிரேசர்
௲அாசஉம் ஹு. மாசி௴. உஉக் தி. கணபதிப்பிள்ளை.

---

## கனம்பொருந்திய முகாமைக்காரருக்குத் தேவகடாட்சமுண்டாவதாக.

### (Answer to the three questions proposed in No. I. Vol. II. page 11-)

உதயதாரகை, உம். புத்தகம் கம். சஞ்சிகை, யகம். பக்கத்திற்
கண்டிருக்கிற மூன்று வினக்களுக்கு மறுமொழி என் புத்திக்குத்
தோன்றினபடி எழுதுகிறேன் என்னவெனில்,

கவது. "தமிழ்ச்சனங்கள் மனதுக்கடுத்ததும் நன்மை தீமைக்
குரித்தானதுமான காரியங்களிலே தேற்றங்கொள்ளாமலிருப்பத
ற்குண்டான தடைகளென்ன." என்னுங் கேள்விக்கு விடை.

க. தமிழருக்குட் செல்வராயிருக்கிறசிலர் வறியவர்கள் முதலான
சகலரும் படித்துக்கொள்ளும்படி பொதுவான கல்விச்சாலைகளை
ஸ்தாபிக்கிறதற்குக் கனவிலும் நினைக்கிறதில்லை. உ. வேறுசிலர் செ
ல்வப்பொருளிருக்கிற இடத்திற் கல்விப்பொருள் வந்தாற் செல்வ
ப்பொருள் அழிந்துபோமென்று வீணுக நினைத்துத் தங்கள் முதலா
னவர்களைப் படிப்பியாமல் விடுகிறார்கள். ௩. தமிழர் பெரும்பாலு
ம் ஒருவரோடொருவர் ஐக்கமாகவிருக்கிறதல்லை. ௪. சாத்திரத்து
க்கடுத்த அல்லது வித்தைக்கடுத்த யாதொரு நூதனத்தை அறிந்த
வன் பிறருக்குக் கற்றுக்கொடுக்கிறதற்கு இடம்பொருள் ஏவலுள்
ளவர்கள் அதற்கடுத்த உதவிபண்ணுமலத் தங்கள் வாழ்நாளை வீணி
லே கழிக்கிறார்கள். ௫. யாதொரு நூதனமான காரியத்தைக் கா
ண்கிறதற்கு முயற்சி பண்ணினுலும் அதிற்றொடர்ந்தேர்ச்சியாயிரு
க்கிறதில்லை. ௬. கல்விப்பயிற்சி அதிகமாக வளர்வதற்காகக் கல்விப்
பிரியன், கம். புத்தகம் யஙஞ் சஞ்சிகையிலெழுதினதற்கு இதுவரை
க்கும் ஒரு விடையெழுதவேணுமென்றுயாதொருவரும் நினையாம
லிருப்பதினுல்அதிற்கவனமில்லையென்பதையுங்கண்டுகொள்ளலாம்.

உவது. "வாலிபர்கள் உயர்ந்த உத்தியோகத்தில் வரவும் அதி
க கனத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் எவ்வித கல்விகள் அவர்க
ளுக்குத் தேவையாயிருக்கின்றது" என்னுங் கேள்விக்கு விடை.

உயர்ந்த உத்தியோகமாவது அரசாட்சியாரின் உத்தியோகங்க
ள் தான். இது இங்கிலீஷ் அரசாட்சியாகையால் இங்கிலீஷ் படிப்
புத்தான் தேவையென்று சொல்லவேண்டியதாயிருக்குது. அதி
லுஞ் சாத்திர சூத்திரங்களைப்பார்க்க நன்றுயெழுத வாசிக்கவும் து
பாசித்தனம் பண்ணப் பழகுதலும் நியாயப்பிரமாணம் முதலிய
வழமையான கல்வியைப் படித்தலும் பிரதான தேவையாயிருக்கி
ன்றன. ஆகிலும் இப்படிப்பட்ட கல்விகளைப் படித்து நல்ல யூகி
களாகவுஞ் சற்குணசாலிகளாகவும் இருக்கிற வநேகர் தெருவழியி
யுலைந்துதிரியச் சர்வமூடராயிருக்கிறவநேகர் மேலான சங்கைபொ
ருந்த உத்தியோகத்திலிருக்கிறதைப் பிரத்தியட்சமாய்க் காண்கிறோ
ம. அதெப்படியென்று விசாரிக்கில் உத்தியோக தத்துவத்திலு
யர்ந்த துரைமாருடைய உதவியினுல் அப்படியாகின்றது. ஆகை
யால் எல்லாவற்றிலுமிதுவே விசேஷமாகத்தேவையாயிருக்கிறது.

௩வது. "இவ்வூரிலிருக்கும் பெண்சனங்கள் படிப்பதினுல அவ
ர்களுக்கு வருமநயமென்ன நட்டமென்ன" என்றகேள்விக்கு விடை.

க. பெண்செனங்கள் படித்தால் அவர்கள் அறியாமையுந் துற்கு
ணங்களும் நீங்கி நல்லறிவுஞ் சற்குணமுமுண்டாம். உ. தேவனை
அறிகிறதற்குந் தங்களாத்தும ஈடேற்றத்தை அடைகிறதற்குமே
துவாயிருப்பார்கள். ௩. பிள்ளைகள் குழந்தைப் பராயமாயிருக்
கிறபோது படிப்பிக்கிறதற்கு மிகவும் லெகுவாயிருக்கும். ௪. எளி
யவளாயிருக்கிற ஒருத்தி படித்துக் கெட்டிக்காரியானால் மனுெ

ண்பிள்ளைகளைப் படிப்பிக்கிறதினாலே தனது சீவனத்துக்கு வழி தேடிக்கொள்வாள்: பெண்கள் படிக்கிறதினால் மேற்சொன்ன சகல வித நயங்களேயன்றி யாதொரு நட்டமுண்டென்று நான் நினைக்கவில்லை: ஆனாலும் இத்தேசத்தில் ஆண்பிள்ளைகள் படிப்பு முயற்சியில்லாதிருக்கிறபோது பெண்கள் படிக்கிறதைப் பற்றிப் பேசவேண்டியதென்ன: இப்படிக்கு,

உடுப்பிட்டி பள்ளிக்கூடம்
௲அ௱௪௨ ஆ மாசி ௴ உடுதி } வேலாயுதர் சின்னத்தம்பி·

## வெண்கலிப்பா.

வானதாரகைகடவுள்வகுத்தாலும் யாழ்ப்பாண
தானதாரகைக்குச் சரியாமோ? தேனமிர்தம்
இத்தாரகையருள்வதல்லாமலெவ்வெவர்க்கும்
அத்தாரகைதானருளுமோ—வித்தாரக்
கோடியுடுவானிருந்துங்கூறுலகச்செய்தியெல்லாம்
தேடிவந்துதேசமெங்குஞ் செப்புமோ-நாடிலதே
ஆதித்தன்முன்பிலவிரடங்குமேயிஃதும்
ஆதித்தன்முன்பதிகமாகுமே-ஓதில்
செகத்திருளிற்சிக்கியே சிந்தைதடுமாறுகின்றோர்
அகத்திருளை நீக்கவதற்காற்றலுண்டோ—முகத்துக்
கண்ணாடிபோலே கருதுபலகல்வியினை
விண்ணாடிவாழ்மீன் விளக்குமோ-மண்ணாளும்
மன்னர்கரமேற்கண்டுமன்னுசிர்மேற்கொண்டு
நன்னயமாய்ப்போற்றவதை நாடுவரோ-துன்னுமுடி
நேமிவட்டத்தோடுதிரைநேமிவட்டஞ் சூழ்ந்திலகும்
பூமிவட்டமெங்குமதுபோகுமோ-தோமிலார்
இதயதாரகையாயிலகுமியாழ்ப்பாணம்
உதயதாரகையினொளி. இப்படிக்கு
களத்தூர். முருகேசமுதலியார் கைபொப்பம்.

(Answer to the Mathematical Query of Mr. D. Riggs in No. 2, Vol. II.)
*Solved by E. Rockwood.*

Let rx and sx be the two numbers, then by the question, $r^2x^2+s^2x^2$ or $(r^2+s^2)\times x^2$ =cube, and $r^3x^3+s^3x^3$ or $(r^3+s^3)\times x^3$ = sqeare. Let $(r^2+s^2)x^2 = x^3 \div t^3$. Then, $x = t^3(r^2+s^2,)$ Substituting this value of x in the second equation, we have $(r^3+s^3)(r^2+s^2)^3\ t^9 =$ square. Putting this equal to $(r^2+x^2)^4\ t^{10}w^2$, we have $t = r^3+s^3 \div (r^2+s^2)\ w^2$. Substituting this value of t in the 4th equation we have $(r^3+s^3)^3 \div (r^2+s^2)^2\ w^6$; in which r, s and w may be taken at pleasure. This formula may be simplified by throwing out w, as being equal to one. Then the formula is $(r^3+s^3)^3 \div (r^2+s^2)^2$.

### Question.

It is required to find two numbers whose sum is a square, the sum of whose squares is a square, the sum of whose cubes is a square, and the sum of whose biquadrates is a cube.

———

### வேலாயுதர் சிதம்பரப்பிள்ளை என்பவர் கேட்ட கணக்கு வினவிற்கு விடை.

செய்யவிருவெண்கள் கனச்சேர்ப்பது கனத்தை
துய்யதனிவர்க்கமவை சூட்டுதொகைவர்க்கம்
மெய்யுறவறிந்துபிறி மேவிடு பலத்தை
ஐயமறவெண்களொடு தாக்கியறிபின்னை:

எ‑து: இயாதாகுதல் இருவெண்களின் கனத்தொகையின் கனத்தை அவையின் வர்க்கத்தொகையின் வர்க்கத்தாற் பிறித்து நின்ற பலத்தை அவ்விருவெண்களாற் பெருக்கி வருந் தொகைகளே வினவிய எண்களாம்:

### வேறோர் வினா.

இருதொகைகூட்டில்வர்க்கமிவைவர்க்கங்கண்டுகூட்டில்
வருமொருதொகையும்வர்க்கம்வகையுடனவைகனங்கள்
தருதொகைதானும்வர்க்கஞ்சாற்றவைவற்க்கவற்கக்
கருதொகைகனமாஞ்சொல்வோர்கணக்கர்கோடாவியாமே:

Batticotta Seminary 12th. March 1842.

## உ. அதிகாரம்.

### வான்சிறப்பு.—*The excellence of Rain.*

௬. விசும்பிற்றுளிவீழினல்லான் மற்றாங்கே
பசும்புற்றலை காண்பரிது.

பு. மேகத்தில் நின்றும் மழைத்துளியானது விழுந்தாற் காண்பதல்லது வீழாதாயின் அப்பொழுதே பசும்புல்லினது தலையையுங் காண்பது அரிது.

If no drop fall from the cloud, not a green blade of grass will be seen. *Drew.*

———

எ. நெடுங்கடலுந் தன்னீர்மைகுன்றுந் தடிந்தெழி
தானல்காதாகி விடின் [லி

பு. மேகந்தான் (அதைக்) குறைத்து (அதனிடத்திலே) பெய்யாது விடுமானால் நீண்ட கடலும் தன்னுடைய இயல்பு குறையப்படும்.

Even the wealth of the wide sea will be diminished, if the cloud that has drawn (its waters) up give them not back again (in rain.) *Drew.*

———

அ. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு.

பு. மழை உலர்ந்துபோமானால் தேவர்களுக்கும் இந்த உலகத்தில் மனிதராலே செய்யப்பட்ட திருவிழாவோடு பூசையும் நடவாது.

If the Heavens dry up, neither yearly festivals nor daily worship will be offered in the world to the inhabitants of Heaven. *Drew.*


## விலங்கியல்.

(Brief descriptions of the most remarkable animals that inhabit the earth illustrated by cuts on a comparative scale.)

### The Rhinoceros.—காண்டாமிருகம்.

காண்டாமிருகத்தில் (௫) வகையுண்டு. அது ஆபிரிக்கா, இந்தியா முதலிய தேசங்களிலும், யாவா, சுமத்திரா முதலிய தீவுகளிலுஞ் சஞ்சரிக்கின்றது. அது (௰௨) அடி நீளங்கொண்டதும் (௬) அல்லது (எ) அடி உயரங்கொண்டதும், பருமத்தில் யானையைப்போலவும இருக்கின்றது. அதற்கு (௩இ) அடி நீளங்கொண்ட ஒரு கொம்புமாத்திரம் மூக்கிலுண்டு:* அதினுடைய மேன்மூஞ்சியோ கீழ்மூஞ்சியிலும் மெத்தநீண்டு அடர்ந்து கூர்கொண்டு வளையத்தக்க இயல்பையுடைத்தாயிருக்கிறபடியால் தான் தின்கிற சாப்பாட்டை லெகுவாய்ப் பற்றிப்பிடித்தெடுத்து வாய்க்குட்டிணித்துச் சப்பித்தினறு முழுங்கிக் கிட்டத்தட்ட அரைக்கினறு தண்ணீரளவுக்குக் குடிக்கின்றது. அதினுடைய கண்கள் மெ

* சிலவிடங்களிற் சஞ்சரிக்கின்ற காண்டாமிருகத்துக்குக் கொம்பு ஒன்றல்ல, இரண்டென அறிக.



த்தச் சிறிதாயிருந்தாலும் அது பார்த்த பார்வையிலே ஒரு ஆனையும் விழுத்திப்போடும். அப்படியிருந்தும் மெத்தச் சாதுவானது. அதை யாராகுதல் நோகப்படுத்திக் காயப்படுத்தும்பொழுது கோபித்துக் கருச்சித்து வீட்டின் மதில்களையும் பாய்ந்து கொண்டோடிப்போகத்தக்க அவ்வளவு பிரமாண்டமான பெலனுள்ளதாயிருக்கின்றது. அப்போ கொஞ்சப் புல்லுமாத்திரம் அதற்குக்கொடுத்தால் அதினுடைய கோபமாறிப்போம். அதினுடைய தோல்மெத்த முரணடர்ந்து தடித்ததாயிருக்கிறபடியால் அத்தை வாளால் வெட்டினால் வாளைமடித்து முரித்துப்போடும். துப்பாக்கியினாற் சுட்டாலும் குண்டு அதின்றோலைப் புட்டுக்கொண்டு தேகத்திற் சற்றெனிலும் பிடியாது. அதினுடைய கால்கள் மிகவுங் குறுத்து மெத்தத் தடித்துவலிமைகொண்டு மூன்றுகவர்கொண்டு பிரிந்துகூர்ந்து அடர்ந்திருக்கும். அது யானையோடே போருக்குப்போய் யானையையும் மடக்கிவிழுத்தி மல்லாக்குப்பறியப் போடவுங் கூடியதாயிருக்கின்றது. அது புல்லு, மூன்று, விளாரிமுதலான விருக்கபதார்த்தங்களைத் தின்று பெரும்பாலுங் கழனிகளிற் சீவிக்கிறபடியாற் பன்றியைப்போலச் சேற்றிலே உருண்டுபுரண்டு விளையாட மெத்தப் பிரியம். (௲௭௱௯௰ம்) ஆ ஒருகாண்டாமிருகத்தைப்பங்காளத்திலிருந்து இங்கிலாந்துக்கேற்றிக்கொணடுபோய் லண்டன்நகரியில் வேடிக்கைபார்த்தார்கள். அப்பொழுது அது இரண்டுவயதுக் குட்டியாயிருந்தாலும், அதைத் தோணியிலேற்றிக்கொண்டு சீமைக்குப்போகிறதற்கும் அதற்குச் சாப்பாட்டுக்குமாகக் கிட்டத்தட்ட (௲) பவுண் காசு செலவுபிடித்தது. நாடோறும் (௫) இறுத்தல் சீனியை (௭) இறுத்தல் அரிசியிற் கலந்து மூன்றுகட் பிரித்து அதற்குச் சாப்பாடு போட்டுவந்தார்கள்.

---

## பஞ்ச தந்திரக் கதை.

### இரண்டாவது சுக்கிரலாபதந்திரம், அல்லது நட்புப்பேறு.

௬௨ம். பக்கத்தினின்று.

அப்போது ஏதாவதாபத்து நேரிடுமென்பதைக் குறித்துத் தன் வளைக்கு நூறுவழிசெய்துகொண்டு உள்ளே இருந்த எலியரசன் புருக்கள் இறங்கின சப்தத்தைக் கேட்டுப் பயந்தடங்கியிருக்கையில், சித்திரக்கிரீவன் சிநேகிதா இரணியகனே எங்களோடே ஏன் பேசவில்லையென, இதைத் தன் சிநேகனுடைய தீங்குரலென்றறிந்து சந்தோஷத்தோடு கூடச் சீக்கிரமாக வளையினின்றும் வந்து நான் புண்ணியவானாகையாற் சித்திரக்கிரீவனென்னு மித்திரனென் வீட்டுக்குவந்தான் இவ்வுலகத்தின் மனதொத்த மித்திரனோடு சம்பாஷிக்கிறதிலும் வேறேயானந்தமேதென்று உபசாரஞ் சொல்லிப் பிறகதனுடைய அவ்வலையைப் பார்த்து மிகவுந் துக்கித்துச் சொல்லுகிறது, மித்திரா! நீ எல்லாரைக் காட்டிலுஞ் சமர்த்தனுமே உனக்கிப்படிப்பட்ட காரியமெப்படி நேரிட்டதெனப், புறு எந்தக் காலத்திலேது நடக்குமோ அது நடக்கும். விதிவலிது, அதின் முன் ஆருடைய உபாய நடக்கும். கடல் பெருகிமேவிட்டால் அதற்குக் கரையேதென, இரணியகன் இந்தப் பேச்சுமெய்யே நூறுநாழிகை தூரத்திலிருந்து வஸதுக்களைத் தெரிந்துகொண்டுபோகிற நீ இன்றைக்கு வேடன் வலையைப் பாராமற் சிக்கிக்கொண்டையேபார். சந்திரசூரியர்களுக்கு ராகுகேதுக்களாற் பீடைவருதலும் யானையும், பறவையும், பாம்புங் கட்டுப்படுதலும் புத்திசாலிகளுக்கு வறுமை வருதலும் தெய்வத்தின் மகிமையேயல்லாமல் வேறல்லவென்று சொல்லிச் சித்திரக்கிரீவன் கட்டுண்டிருக்கிற வலைக் கயிற்றை அறுக்கத் தொடங்கிற்று. அப்போது சித்திரக்கிரீவன் மித்திரா, முன்னே என் பரிவாரத்தினுடைய கயிற்றையறு பிறகென்பாசத்தைத் துணியெனக் கேட்டு, எலி என் பல்லு மிகவும் மெதுவானது அதற்குப் பலமுங் கொஞ்சம் ஆகையால் இத்தனைபெயருடைய பந்தனைகள் எனக்கெப்படி அறுபடும். ஆதலால் உன்தளையை அறுத்துப் பின்பென் சாமார்த்தியத்துக்குத்தக்கதாக அவர்களுடைய தளையையும் அறுப்பேன். சித்திரக்கிரீவன் நல்லது முன்னே இவர்களுடைய பாசத்தை அறுவென, இரணியகன் தன்னைக் காப்பாற்றிக்கொண்டு பிறகு தன் பரிவாரங்களைக் காப்பாற்றவேண்டும் ஏனென்றால், அறம்பொருளின்பம் வீடாகிய இவைகளுக்குப் பிராணன் முக்கியசாதனமாம். ஆ

கையால்அதைக்காப்பாற்றினால் எல்லாவற்றையுங் காப்பாற்றினாப்போலாகிறதென, சித்திரக்கிரீவன் இந்த நீதி சரிதான் ஆனாலும் இப்படிப்பட்ட வேதனையினின்றும் பாலனம்பண்ணுகிறதுக்கல்லோ என்னை இவர்கள் இராசாவாக நினைக்கிறார்கள். ஆகையால் என் பிராணனிடத்திலிச்சையைவிட்டு இவர்களைப் பிழைப்பியென, அதைக் கேட்டு எலி சொல்லுகிறது. நீ பரமசாது அடுத்தவர்களை ஆதரிக்கிறவனாயிருக்கிறாய், எசமானனிடத்தில் விசுவாசமாயிருக்கிறசேவகனும சேவகனிடத்திற் பிரிதியாயிருக்கிறஎசமானனுஞ் சுகமடைவார்களென்று சொல்லி, எல்லாவற்றின் பாசங்களையும்அறுத்துச் சித்திரக்கிரீவனுடை கட்டைச்சேதித்து, பிறகொன்றுக்கொன்று தழுவிக்கொண்டு பிரிய வார்த்தைகள் சொல்லின பிறகு சித்திரக்கிரீவன் பரிவாரத்தோடு கூடத் தன்னிடத்திற்குப் போனது. லகுபதனென்னுங் காகம் இவையெல்லாம் பார்த்தாச்சரியப்பட்டு இரணியகனைப் பார்த்துச் சொல்லுகிறது, நீ பாக்கியவானாயிருக்கிறாய் ஆகையாலுன் சிநேகத்தை விரும்புகிறேன், ஆனாலும் நீதயைசெய்தெனக்குச் சிநேகனாகவேண்டுமென, அப்போது இரணியகனீயாரென, காகம் நான் லகுபதன் என்கிற காக்கையென, அதைக் கேட்டெலி ஆனாலும் உனக்கும் எனக்கும் வெகுதூரம். உலகத்திற் சமானஸ்தர்களுக்குச் சிநேகமுண்டாகிறது; நான் உனக்கிரை நீ என்னைத் தின்கிறவன் இப்படியிருக்கையிலெப்படியாகும் அது ஆபத்துக்கே முகாந்திரமாம். நரிசிநேகத்தினால் ஒரு மான் வலையில் அகப்பட்டது போல உன்னாலெனக்குப் பொல்லாங்கு நேரிடுமென, லகுபதனதைக் கேட்டு மானெப்படி வலையிற் சிக்கிக்கொண்டதென எலி சொல்லத்தொடங்கிற்று.

(இன்னும் வரும்.)

## PANCHA-TANTRA-KATEI.

(A Translation, &c.,—Continued from page 32.)

